77—

தண்டையார்பேட்டை பகுதி முத்தமிழ் நகரில் கழிவுநீர் அகற்றலும் குடிநீர் வசதி அளித்தலும்

***21303**—திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன் மற்றும் திரு. எ. தெய்வநாயகம்:*

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, தண்டையார்பேட்டை பகுதியில் முத்தமிழ் நகரில் குடிநீர் வசதியும், கழிவுநீர் அகற்றும் வசதியும் இன்றி அக்குடியிருப்பு மக்கள் சிரமப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவ்வசதிகள் செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு:-ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. தகவல் கோரல்.

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து.

திரு. பெ. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். அதனைப் பரிசீலனை செய்து, பிறகு எடுத்துக் கொள்ளலாம் என்று நான் உங்களிடம் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) இல்லை; நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். கொடுத்திருப்பது பின்னர் எடுத்துக் கொள்ளப்படும். நான் விவரம் சேகரித்து உங்களுக்குச் சொல்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) திரு. பழனிசாமி, நீங்கள் ஒன்றும் கொடுக்கவில்லை.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS